12T2 காலாண்டுப் பொதுத் தேர்வு, செப்டம்பர் - 2017

-----

பதிவெண் | | | | | | |

# வகுப்பு 12

நேரம்: 3.00 மணி **பகுதி - I - தமிழ் இரண்டாம் தாள்** மொத்த மதிப்பெண்கள்: 80

**(உரைநடை, துணைப்பாடம், செய்யுள் நயம் பாராட்டல், தமிழாக்கம், படைப்பாற்றல், மொழித்திறன்)**

**அறிவுரை:** 1. அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்து கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டும் எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு:** விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும் மற்றும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

**I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளின் மிகாது விடை எழுதுக:** **3×4=12**

1) நாடகத் தமிழின் சிறப்பியல்புகளாகக் கட்டுரையாசிரியர் பரிதிமாற்கலைஞர் கூறுவன யாவை?
2) நமது நாட்டில் நீண்ட காலமாக நிகழ்ந்து வரும் பெருங்கொலை என்று திரு.வி.க. வருந்தி உரைப்பனவற்றை எழுதுக.
3) கீட்ஸ், ஜான்ரஸ்கின், பவணந்தி முனிவர் ஆகியோர் கூறும் கவிதையின் இயல்புகள் யாவை?
4) நாடு என்னும் பற்றால் சமரசத்தை இழப்பது பற்றித் திரு.வி.க. உரைப்பன யாவை?
5) இசைத்தமிழ் என்பது யாது? முற்காலத்தும் இக்காலத்தும் விளங்கும் இசைத்தமிழ் நூல் வகைகள் யாவை?

**II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளின். மிகாது விடை எழுதுக:** **3×4=12**

6) நம் முன்னோர்கள் நனி நாகரிகராய் விளங்கிய பான்மையை விளக்குக.
7) பழந்தமிழ் மாந்தர் பெரிய முயற்சியை மதித்து ஒழுகினர் என்பதனை விளக்குக.
8) அறுமுறை வாழ்த்து - விளக்குக.
9) மக்கள் நாகரிகத்தோடு மாட்டிற்கும் தொடர்புண்டு என்பதனைப் பாவணார் கூறுமாறு யாங்ஙனம்?
10) விறலுடை இளைஞர்க்கும் மாடு உவமையாகக் கூறப்பட்டதனை விளக்குக.

**III. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் இருபது வரிகளின் மிகாது விடை எழுதுக:** **1×6=6**

11) இயல் இசை நாடகம் என்ற முத்தமிழ் வகைமை குறித்து பரிதிமாற கலைஞர் உரைப்பனவற்றைத் தொகுத்து வரைக.
12) நம் தமிழ்மாந்தர் கடைபிடித்து ஒழுகிய ஒற்றுமை உணர்வும், ஈகையும் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

**IV. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் விடை எழுதுக:** **2×10=20**

13) 'பால்வண்ணம்பிள்ளை' **அல்லது** 'சட்டை' என்னும் சிறுகதையின் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக. **(அல்லது)**
வேலி - இந்த கதையில் ஒரு நிகழ்ச்சியை உரையாடலதக எழுதுக.

14) மகன் - இக்கதை மாந்தரைப் பற்றி திறனாய்வு செய்க. **(அல்லது)**
கோமதி மருமகளை வேறுபாடு கருதாமல் அன்பு பாராட்டி ஏற்றுக் கொண்டதாக கற்பனையாக ஒரு கதையெழுதுக. **(அல்லது)**
பால்வண்ணம்பிள்ளை - பாத்திரப் படைப்பை ஆய்க.

**V.** 15) **பின்வரும் செய்யுளைப் படித்துணர்ந்து அதில் அமைந்துள்ள மையக்கருத்தை நயத்துடன் எடுத்துரைத்து, அதில் அமைந்துள்ள எதுகை, மோனை, இயைபு,, முரண், அணி, சந்தச்சுவை, உவமை, உருவகம், கற்பனை ஆகியவற்றுள் ஏற்புடையவற்றைச் சுட்டி எழுதுக:** **1×10=10**

அன்பரம் வளர்ந்தி டாமல்
    ஆற்றலும் அறிவும் குன்றும்
வனப்புகள் சூதும் வாதும்
    வழக்குகள் வளரும் வாழ்வின்
இன்பமும் ஊக்கமும் ஆன்ம
    எழுச்சியும் இன்றி என்றும்
துன்பமும் சோம்பல் சூழும்
    சுதந்திரம் இல்லா நாட்டில்

- நாமக்கல் கவிஞர்

குறிப்பு: காதுகேளாத மாணவர்களுக்கு மட்டும் கீழ்க்கண்ட VI மற்றும் VII வினாக்களுக்கு மாற்றுவினா வழங்கப்பட்டுள்ளன.

**VI.** பின்வரும் தொடர்களில் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் தமிழாக்கம் தருக: **3×2=6**

16) A penny saved is a penny gained.
17) Art is long but life is short.
18) To err is human, to forgive is divine.
19) Gandhi fought against the British without resorting to violence.
20) To the good people, world appears good.
21) No smoke without fire.

**VII.** 22) பின்வரும் பழமொழிகளுள் ஒன்றினை விளக்கும் வகையில் வாழ்க்கை நிகழ்வில் அமைத்துப் (பத்து வரிகளில்) எழுதுக: **1×4=4**

அ) தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்.
ஆ) மனம் இருந்தால் மார்க்கம் உண்டு.
இ) தன் கையே தனக்குதவி. **(அல்லது)**

மலைவீழ் அருவி **(அல்லது)** ஏற்றமிகு இந்தியா என்ற தலைப்பில் கவிதை எழுதுக.

**5×2=10**

குறிப்பு: காதுகேளாத மாணவர்களுக்கான மாற்று வினா.

**VI மற்றும் VII-ல் உள்ள வினாக்களுக்குப் பதிலாக காதுகேளாத மாணவர்கள் பின்வரும் பத்தியைக் கவனமாகப் படித்து கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு வினா எண் 16 முதல் 22 வரையில் உள்ளவற்றில் எவையேனும் ஐந்தனுக்கு மட்டும் ஏற்ற விடையை எழுதுக.**

இன்றைய பட்டதாரிகளிடம் அறிவுத்தாகம் குறைந்து வரும் அவலநிலை உள்ளது. இவர்கள் படிக்கும் போதே பாட நூல்களை ஓரங்கட்டி குறிப்பேடுகளைத் தவறாமல் வாங்கிப் படித்தவர்கள். இதனால் மூல நூல்கள் தூசி படிந்து கிடக்கின்றன. தங்கள் துறைகளைச் சார்ந்த நூல்களையாவது படிக்க வேண்டும். தரக்குறைவான இதழ்களைப் படிப்பதை ஒதுக்க வேண்டும். சுயநலத்திலும், திரைப்படம், தொலைக்காட்சி ஆகிய கவர்ச்சிகளிலும் நம்மை இழந்துவிடக்கூடாது.

இந்த நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஒரு வியட்நாம் கவிஞன் அடிமையானது பற்றி எழுதுகின்றான். பிரெஞ்சுக்காரர்களின் ஆயுதங்கள் எங்களை அடிமைப்படுத்தின. ஆனால் அவர்களின் நாட்டு நூல்கள் எங்களுக்கு விடுதலை பெற்றுத் தந்தன என்பது அக்கவிஞனது கூற்று.

டால்ஸ்டாய் தம் 15வது வயதில் ஒரு நாள் நூலகத்தில் ரூசோவின் சமுதாய ஒப்பந்தம் என்ற நூலைப் படித்தார். அன்று முதல் ரூசோவின் உருவம் தாங்கிய பதக்கத்தைப் பெருமையுடன் தமது கழுத்தில் அணிந்து கொண்டார். ஆகையால் பட்டதாரிகள் ஓய்வு நேரங்களில் நூலகம் நோக்கிச் செல்ல வேண்டும்.

**வினாக்கள்:**

16) இன்றைய பட்டதாரிகளிடம் குறைந்து வருவது எது?
17) தூசி படிந்து கிடப்பவை யாவை?
18) ஒதுக்க வேண்டியது எது?
19) வியட்நாம் கவிஞனின் கூற்று யாது?
20) சமுதாய ஒப்பந்தம் என்ற நூலை எழுதியவர் யார்?
21) ரூசோவின் உருவம் தாங்கிய பதக்கத்தைப் பெருமையுடன் அணிந்து கொண்டவர் யார்?
22) பட்டதாரிகள் ஓய்வு நேரங்களில் என்ன செய்ய வேண்டும்?

**VIII.** பின்வரும் வினாக்களுக்கு அடைப்புக் குறிகளுக்குள் குறிப்பிட்டுள்ளவாறு விடை எழுதுக: **10×1=10**

23) அப்பசி மாதம் அடமள இம்பாங்க.
**(தொடரில் உள்ள கொச்சைச் சொற்களைத் திருத்தி எழுதுக)**
24) வேட்டுவ பெண்கள் விளையாட பொவதுண்டு என்று சஞ்சீவி பர்வமச் சாரல் பாடுகிறது. **(தேவையான இடங்களில் வல்லின மெய் இட்டு எழுதுக)**
25) அவன் கொடுத்த செக் பாங்கில் பணம் இல்லையென்று ரிடர்னாயிற்று.
**(பிறமொழிச் சொற்களை நீக்கி தூய தமிழில் எழுதுக)**
26) பிரயாணி பிரயாணத்தை ரத்து செய்தவுடன் ரூபாய் பட்டுவாடா செய்யப்பட்டது.
**(பிறமொழிச் சொற்களை நீக்கி எழுதுக)**
27) கிலி, கிளி **(அல்லது)** உரை, உறை வேறுபாடறிந்து வாக்கியத்தில் அமைத்து எழுதுக.
28) பாஞ்சாலிக் கண்ணனைப் பார்த்துக் கண்ணாக் காப்பாய் என்று கூறினாள்.
**(தேவையற்ற இடங்களில் உள்ள வல்லின மெய்யை நீக்கி எழுதுக)**
29) நெல் வயளில் கலை பரித்தபோது அறவு கடித்ததால் அலறினாள்.
**(மயங்கொலிப் பிழையினைத் திருத்தி எழுதுக)**
30) ஊருக்கு போய்ச் சேர்ந்ததும் கடிதம் எழுது என்று என் தந்தை சொன்னார்.
**(பொருத்தமான நிறுத்தற்குறி இடுக)**
31) ஒன்றோ அல்லது இரண்டோ தருக. **(வாக்கியப்பிழையை நீக்கி எழுதுக)**
32) பலாப்பிஞ்சும் வாழைப்பிஞ்சும் சேர்த்து கறி சமைத்தனர்.
**(மரபுப்பிழையை நீக்கி எழுதுக)**

----------